1972 ஆகஸ்ட் 21]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, விருது நகரில் யாரும் முன்வராத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே "ஹையர் பர்ச்சேஸ்" திட்டமாக மாற்றியிருக்கிறோம்.

திரு. எல். பலராமன் : தலைவர் அவர்களே, இராணிப்பேட்டையில் தொழிற்பேட்டைக்காக இடம் வாங்கப்பட்டு, இதுவரை நடவடிக்கை எடுக்கப்படாமலிருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அதன்மீது அரசு என்ன நடவடிக்கை எடுக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இந்த மன்றத்திலே பலமுறை விளக்கம் தரப்பட்டிருக்கிறது. பல ஆண்டுகளுக்கு முன்பு ஏராளமான நிலம் வாங்கியிருக்கிறார்கள். ஏன், எதற்கு வாங்கியிருக்கிறார்கள் என்ற குறிப்பு அரசிடத்தில் இல்லை. ஆகவே அவைகளைப் பயன்படுத்த முடியாத சூழ்நிலை இருக்கிறது. இந்த அரசு பொறுப்பேற்ற பின்னரே, மாவட்ட ஆட்சித் தலைவரும், இந்தத் துறையின் இயக்குநரும் அங்கே சென்று, அங்கே உள்ளவர்களுக்கு ஊக்கம் கொடுத்து, "இன்ன உதவி செய்வோம், இந்த இடத்தைப் பெற்றுத் தொழில் செய்ய வாருங்கள்" என்று கூறியிருக்கிறார்கள். ஏதாவது புரட்சிகரமான அளவிலே, பிரதிபலன் (ரெஸ்பான்ஸ்) இருப்பதாகத் தெரியவில்லை. அங்கத்தினர் அவர்கள் மேற்படி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். இராணிப்பேட்டையிலிருந்து ஒரு 100, 200 தொழில் அதிபர்கள் கூடுவார்களானால், அரசாங்க உதவியோடு, அந்த இடத்தைப் பயன்படுத்துகிற வாய்ப்பு ஏற்படும்.

புலவர் ஓ. அறிவுடைநம்பி : தலைவர் அவர்களே, தென் ஆற்காடு மாவட்டத்தின் தலைநகரான கடலூரில் தொழிற்பேட்டை தொடங்க் முயற்சி எந்தளவுக்கு இருக்கிறதென்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இதிலே இடத் தகராறு இருந்ததாக நினைவு. இப்போதுதான் அது தீர்க்கப்பட்டிருக்கிறது. விரைவிலே கட்டப்படும்.

Village Courts.

*146 Q.—THIRU L. BALARAMAN and Thiru V. ISVARMURTI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Government have taken any steps to establish village courts in villages; and

(b) if so, the date on which they will begin to function?

[1972 ஆகஸ்ட் 21

கிராமங்களில் ஊர் நீதி மன்றங்கள்

திரு. எல். பலராமன் :
திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கிராமங்களில் ஊர் நீதி மன்றங்கள் ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது இது அமுலுக்கு வரும் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) செயற் குறிப்பு அரசின் பரிசிலனையில் இருக்கிறது.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, இந்த கிராமங்களில் ஊர் நீதி மன்றங்கள் எதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன ? எந்தெந்த அதிகாரங்கள் இந்த ஊர் நீதி மன்றங்களுக்குக் கொடுக்கப் பட இருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, வெள்ளைக் காரன் காலத்தில் "வில்லேஜ் கோர்ட்ஸ் ஆக்ட்" என்ற முறையில் நீதி மன்றங்கள் எல்லாம் அமைக்கப்பட்டன. அதற்குப் பின் 1950-ஆம் ஆண்டு, பஞ்சாயத்துச் சட்டம் உருவாக்கப்பட்டபோது, பஞ்சா யத்துக் கோர்ட்டுகள் சில உருவாக்கப்பட்டன. 1958-ஆம் வருடம் பஞ்சாயத்துச் சட்டங்கள் மாற்றியமைக்கப்பட்ட பிறகு, 1950-ஆம் ஆண்டுச் சட்டத்திலே உள்ள பஞ்சாயத்துக் கோர்ட்டை நீக்கி விட்டார்கள். ஆகவே இப்போது பழைய வில்லேஜ் கோர்ட்ஸ் சட்டத்தின் அடிப்படையிலே ஊர்கள்தோறும் நீதிமன்றங்கள் களை, இன்னின்ன வழக்குகளை விசாரிக்கலாம் என்றிருக்கிறது. அது உயர்நீதிமன்றத்தின் ஆலோசனைக்காக அனுப்பப்பட்டிருக்கிறது. இப்போது சென்னையிலே ஆனரரி மாஜிஸ்டிரேட் கிரிமினல் வழக்கு கள், இன்னின்ன வழக்குகளை விசாரிக்கலாம் என்றிருக்கிறது. அது போலவே, ஏற்கனவே இருந்த சட்டத்திலே சிவில் ஜுரிஸ்டிக்ஷன் எத்தனை ரூபாய்வரை கேஸ்களைத் தீர்த்துக்கொள்ளலாம், ப்ரோ-நோட் கேஸ் இரண்டையும் ஆலோசித்து எந்த அளவுக்கு அதிகாரம் கொடுப்பது என்று பரிசீலித்து வருகிறோம்.

திரு. எல். பலராமன் : தலைவர் அவர்களே, ஊர் பஞ்சாயத்து முறையில் ஊர் நீதிமன்றங்கள் ஏற்படுமானல், சில பிரச்னைகள் ஊரிலேயே தீர்க்கப்படுவதால், மக்களிடையே சுமுகமான பழக்க வழக்கங்கள் ஏற்படுவதை அரசு உணருகிறதா ? அதுகுறித்து ஏதாகிலும் உத்தேசித்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

1972 ஆகஸ்ட் 21]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, பஞ்சாயத்து நீதிமன்றங்கள் சட்டத்தை உருவாக்கும்போது, இப்படிப்பட்ட அரசியல் கண்ணோட்டம் ஏற்படலாமோ என்ற சந்தேகத்திலே 1958-ஆம் வருடம் இதை விட்டிருக்கிறார்கள். இப்படி இருப்பதாலே ஊர் நீதிமன்றங்கள் வேண்டுமென்று சொல்லுவது சரியாக இருக்க முடியாது. ஆனால் அதில் அரசியல்வாதிகள் ஈடுபட்டு, கட்சிப் பிரதிவாதங்கள் அந்தக் கிராமங்களில் வரமுடியாத அளவுக்கு நீதிமன்றம் எப்படி அமைக்கலாம் என்பதை இப்போது பரிசீலித்து வருகிறோம். இப்போது சென்னையிலும், சில முனிசிபல் எல்லைகளுக்குள்ளும் செயல்பட்டுவருகின்றன.

திரு. சா. கணேசன் : தலைவர் அவர்களே, இந்த நீதிமன்றங்களில் சிவில் வழக்குகள், கிரிமினல் வழக்குகள், இரண்டையும் விசாரிப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ? அப்படியானால் சிவில் வழக்குகளில் தொகை அல்லது வகை நிர்ணயம் செய்து இந்த அளவு தொகை அல்லது இந்த முறை வழக்குகள் என்று வரையறை செய்து வரம்பு கட்டி அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இந்த இரண்டையும் தான் பரிசீலனை செய்து மசோதா தயாராக இருக்கிறது. சிவில், கிரிமினல் இரண்டு அதிகாரங்களும் கொடுக்கலாமா, எந்த அளவுக்குக் கொடுக்கலாம் என்பதுபற்றி பரிசீலனையில் இருக்கிறது.

திரு. அய்யணன் அம்பலம் : தலைவர் அவர்களே, ஊர் நீதிமன்றம் எந்த அடிப்படையில் அமைக்கப்படும் ? தேர்தல் முறையா, இல்லாவிட்டால் நியமன முறையா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, தேர்தல் முறை இருந்தால் ஆட்சேபணை வருகிறது, கட்சிப் பிரதிவாதங்கள் ஏற்படுகின்றன. இப்போது நகரங்களில் இருக்கிற நீதிமன்றங்களுக்கு கௌரவ நீதிபதிகளை அரசாங்கமே நியமிக்கிறது. இந்த அரசாங்கம் வந்த பிறகு, "ஆனரரி மேஜிஸ்டிரேட்ஸ்" ஆகக்கூட அரசியல் வாதிகளாக இருப்பவர்களைப் போடக்கூடாது என்று ஆணை பிறப்பித்திருக்கிறோம். அந்த அடிப்படையில் கட்சி அரசியல் நுழையாமல் உண்மையிலே மக்களுக்காகப் பாடுபடக்கூடியவர்கள் இந்த நீதிபதிகளாகப் பணியாற்றக்கூடிய வாய்ப்பை உருவாக்கலாம் என்பது பரிசீலனையில் இருக்கிறது. முடிவு எதும் எடுக்கவில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, சென்னையில் "பார் கவுன்சில்" இதுமாதிரி ஊர் மன்றங்கள் ஏற்படக்கூடாது என்று ஒரு தீர்மானம் போட்டிருப்பது அரசுக்குத் தெரியுமா? என்ன காரணத்தால் அந்தத் தீர்மானத்தைப் போட்டிருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, பத்திரிகையில் படித்தேன். அந்தத் தீர்மானத்தைப் போட்ட அங்கத்தினரைக் கேட்டேன். ஊர் நீதிமன்ற மசோதாவைப் பார்த்த பிறகு போட்டீர்களா என்று கேட்டேன். இன்னும் பார்க்கவில்லையென்று சொன்னார். பார்த்தாலும் அவர்கள் சரி என்பார்கள் என்று நம்புகிறேன்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : தலைவர் அவர்களே, வக்கீல்கள் தங்கள் தொழிலைப் பாதிக்கும் என்ற காரணத்தால், இந்த ஊர் நீதிமன்றங்கள் வேண்டாம் என்று சொல்லுவதை அரசு உணருமா அல்லது உறுதியாக ஏற்படுத்துவதற்கு அரசு முன்வருமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, யாரோ ஒரு சிலர் சொல்லுவதற்காக நான் சார்ந்திருக்கிற வழக்குரைஞர் சமுதாயத்தைக் குறை சொல்லுவதை ஏற்றுக்கொள்ளவில்லை.

திரு. சி. வி. ராஜகோபால் : தலைவர் அவர்களே, இதற்கு முன்னால் வெள்ளைக்காரன் காலத்தில் பஞ்சாயத்து கோர்ட் என்றும் கிரிமினல் பெஞ்சு மேஜிஸ்டிரேட் கோர்ட் என்றும் இருந்திருக்கிறது. ஆனால் இப்போது எந்த அவசியத்தில், எந்த அடிப்படையின் காரணமாக ஊர் நீதிமன்றங்கள் ஏற்படுத்த வேண்டும்? அது தேவைதானா? இப்போது மேஜிஸ்டிரேட் கோர்ட் கிரிமினல் வழக்குகளை விசாரிப்பதற்கு இருக்கிறது. சிவில் கோர்ட் பண விஷயமாக உள்ள விவகாரங்களை விசாரிக்க இருப்பது சர்க்காருக்குத் தெரிந்தும், இதன் அடிப்படை என்ன, அவசியம் என்ன, இந்த ஊர் நீதிமன்றம் எப்படி இயங்கப் போகிறது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, ஏற்கனவே இருக்கிறது என்று அங்கத்தினர் அவர்கள் ஒப்புக்கொண்ட காரணத்தால், இந்தக் கேள்வி எழவில்லை. ஏற்கனவே இருந்த சட்டத்தை இடையில் நிறுத்தி வைத்தோம். அதனால் தான் நகரங்களிலும் கிராமங்களிலும் நிறுத்தி வைக்கப்பட்டது. அது மீண்டும் கொண்டு வரப்படுவது பரிசீலனையில் இருக்கிறது.